



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 206 19.1.2026 MONDAY THAI : 5 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 206 19.1.2026 திங்கள்கிழமை தை : 5 விலை : ரூ.5/-


## ஜன. 20ல் கூடுகிறது தவெக தேர்தல் அறிக்கை குழு

# “ஆலோசனை கூட்டம்”



■ மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்களின்109ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை அலங்காநல்லூர் கேட்டுகடை சிலோன்காலனி பகுதி இல்லத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு நகர இணைச் செயலாளர் புளியம்மாள் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

சென்னை: ஜன.19-

தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கைக் குழு ஜன.20ஆம் தேதி நடைபெறும் என அக்கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தமிழக வெற்றிக் கழகம் சார்பில் தேர்தல் அறிக்கைக் குழுவை நம் வெற்றித் தலைவர் ஏற்கெனவே அறி வித்திருக்கிறார். இந்தக் குழு, வருகின்ற 20ஆம் தேதி (20.01.2026) செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு, சென்னையில் உள்ள கழகத் தலைமை நிலையச் செயலகத்தில் ஆலோசனை மேற்கொள்ள உள்ளது.



தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு இந்தத் தேர்தல் அறிக்கை உருவாக உள்ளது. இது தொடர்பாக பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும் தேவைகளையும் அறிந்து, தரவுகளைப் பெறுவது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும்.

இக்கூட்டத்தில் தேர்தல் அறிக்கைக் குழுவினர் மட்டுமே பங்கேற்பார்கள் என்பதைக் கழகத் தலைவர் அவர்களின் ஒப்புதலோடு தெரி வித்துக்கொள்கிறேன்’ என குறிப்பிட்டுள்ளார்.

## வங்காராவில் வீரபத்ர ரத யாத்திரை பி.வி. பிரபாகர் ராவ் தலைமையில் பிரமாண்ட ஊர்வலம்

வங்காரா, ஜன.19

வங்காரா கிராமத்தின் மரியாதைக்குரிய ஆன்மீக மற்றும் கலாச்சார பாரம்பரியமான நூற்றாண்டு பழமையான வீரபத்ர ரத யாத்திரை புதன்கிழமை மிகுந்த பக்தி, வண்ணம் மற்றும் சமூக பங்கேற்புடன் கொண்டாடப்பட்டது. முன்னாள் பிரதமர் பாரத ரத்னாவின் மூன்றாவது மகன் பி.வி. பிரபாகர் ராவ் தலைமையில் இந்த பிரமாண்ட ஊர்வலம் நடைபெற்றது. ஸ்ரீ.பி.வி. நரசிம்ம ராவ், பி.வி. சரத் பாபு, பி.வி. மதன் மோகன் ஜிதேந்தர் ராவ் தனுகுலா ஆகியோருடன் இணைந்து டி.ஒய்.ஜே.எஃப் தலைவர் நம்பிக்கை மற்றும் குடும்ப வரலாற்றில் ஆழமாக வேரூன்றிய



ஒரு பாரம்பரியத்தைத் தொடர்கிறார்.

வங்காராவிலிருந்து வரலாற்று சிறப்புமிக்க கோத்தகொண்ட வீரபத்ர சுவாமி கோயிலுக்குச் செல்லும் ரத யாத்திரை, கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியதாக நம்பப்படுகிறது.

## அனைத்து சமுதாய மக்களும் பயன்படும் வகையில் பாராளுமன்ற உறுப்பினர் நிதி : ஆர்.சச்சிதானந்தம் பெருமிதம்

சின்னாளபட்டி, ஜன.19

திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 90 லட்சத்தை நிலக்கோட்டை தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் நலத்திட்ட பணிக்காக ஒதுக்கீடு செய்தார். அதன்படி விளாம்பட்டியில் அங்கன்வாடி மையம் ரூ. 18 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டது. கரியாம்பட்டியில் அங்கன்வாடி மையம் ரூ. 17 லட்சத்திலும், வத்தலக்குண்டு அருணாசலபுரத்தில் அங்கன்வாடி மையம் ரூ. 17 லட்சத்திலும், சேவுகம்பட்டி பேரூராட்சி எம்.வாடிப்பட்டியில் புதிய



நியாயவிலைக்கடை ரூ. 13 லட்சத்திலும், கோட்டூர் ஊராட்சி ஜங்கால்பட்டி கிராமத்தில் மேல்நிலை தண்ணீர் தொட்டி ரூ. 25 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டது. ஜங்கால்பட்டியில் நடைபெற்ற மேல்நிலைத் தண்ணீர் தொட்டி திறப்புவிழாவிற்கு நிலக்கோட்டை மேற்கு ஒன்றிய திமுக செயலாளர் கரிகாலபாண்டியன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலு வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் மேல்நிலை தண்ணீர் தொட்டியை திறந்து வைத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவந்தார்.

நிகழ்ச்சிகளில் நிலக்கோட்டை ஒன்றிய திமுக செயலாளர்கள் சௌந்திரபாண்டியன், மணிகண்டன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பிரபாகரன், ஒன்றிய செயலாளர் ஸ்டாலின், அம்மையநாயக்கனூர் பேரூர் கழக திமுக செயலாளர் ராஜாங்கம், சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் ஜான்போஸ்கோ, திமுக நிர்வாகிகள் முருகன், செல்வம், மலையாளம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் செந்தில், சௌந்தரம், மற்றும் வட்ட வழங்கல் அலுவலர் பாரதி உட்பட பலர் கலந்து கொண்டனர். தங்கள் கிராமங்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் அவர்களுக்கு கிராம மக்கள் மனதார பாராட்டும், நன்றியும் தெரிவித்தனர்.



## அலங்காநல்லூர் பெரியஊர்சேரி அதிமுக சார்பில் எம்ஜிஆர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை

மதுரை, ஜன.19-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திரு உருவ படத்திற்கு அ.தி.மு.க கிளைக் கழகத்தின் சார்பாக மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய எம்.ஜி.ஆர் இளைஞரணி இணைச்செயலாளர் ப.செந்தில்குமார் ,கிளைக்கழக செயலாளர் சந்திரன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரேவதி,ஒன்றிய விவசாய அணி துணை செயலாளர் பாலமுருகன்,ஆறுமுகம், வீரணன், குமரேசன், ஞானசேகரன், பக்கிரி மொகம்மது, கோவில்பிச்சை, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்..



■ மக்கள் திலகம் எம்ஜிஆர் அவர்களின் 109 ஆவதுபிறந்தநாளை முன்னிட்டு மதுரை அலங்காநல்லூர் அருகே உள்ளஅ.புதுப்பட்டி, கிராமத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு அதிமுக கிளை கழக செயலாளர் பாண்டுரங்கன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அருகில் அதிமுக நிர்வாகிகள் உள்ளனர்.

## “அதிமுக ஒன்றிணையாமல் திமுகவை வீழ்த்த முடியாது” ஓபிஎஸ் மீண்டும் திட்டவட்டம்

சென்னை, ஜன.19–

எம்ஜிஆரின் 109வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அண்ணா சாலையில் உள்ள எம்ஜிஆர் சிலைக்கு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் செய்தியா ளர்களிடம் அவர் கூறியதாவது: 2026 சட்டப்பேரவை தேர்தலில் யாருடன் கூட்டணி என்பதை ஓரிரு தினங்களில் அறிவிப்பேன்.

எம்ஜிஆர் உருவாக்கிய சட்ட விதிப்படிதான் எம்ஜிஆரும், ஜெயலலிதாவும் அதிமுகவை வளர்த்து வந்தனர். அதிமுகவில் இருந்து பிரிந்து இருக்கும் சக்திகளை ஒன்றிணைக்க வேண்டும். அவ்வாறு இல்லை யெனில் இப்போது உள்ள அதிமுகவால் திமுகவை வீழ்த்த முடியாது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சென்னை கடற்கரைப் பகுதிகளில் ஜன.14 முதல் 16 வரை 161 டன் திடக் கழிவுகள் அகற்றம்

**சென்னை, ஜன.19–**

கடற்கரைப் பகுதிகளில் கடந்த 14ம் தேதி முதல் 16ம் தேதி வரை 160.83 டன் திடக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ள தாக சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள கடற்கரைப் பகுதிகளை பொது மக்களின் பொழுதுபோக்கிற்கு உகந்த வகையில் மேம்படுத்த மாநகராட்சி சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மெரினா கடற்கரை, பெசன்ட் நகர், திருவான்மியூர், பாலவாக்கம், நீலாங்கரை, அக்கரை, திருவொற்றியூர் கடற்கரை பகுதியில் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் இயந்திரங்கள் கொண்டு நாள்தோறும் சுழற்சி முறைகளில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்லக்கூடிய கடற்கரைப் பகுதிகளில் கூடுதலாக தூய்மைப் பணியாளர்கள். இயந்திரங்களைக் கொண்டு கடந்த 14ம் தேதி முதல் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மெரினா கடற்கரையில் 116.17 டன், பெசன்ட் நகரில் 20.97 டன், திருவான்மியூர் கடற்கரையில் 9.02 டன். திருவொற்றியூரில் 3.37 டன், பாலவாக்கத்தில் 6.96 டன், நீலாங்கரையில் 4.34 டன் என மொத்தம், 160.83 டன் குப்பைகள் அகற்றப்பட்டன.

கடற்கரைப் பகுதிகளை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பது அனைவரின் பொதுபொறுப்பாகும். கடற்கரைகளில் குப்பைகள், பிளாஸ்டிக் கழிவுகள், உணவுப் பொருள், எச்சங்கள் உள்ளிட்ட எந்த விதமான கழிவுகளையும் கொட்டுவது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, கடற்கரைப் பகுதிகளுக்கு வரும் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அனைவரும் தங்களது குப்பைக் கழிவுகளை, அதற்காக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் மட்டும் போட்டு. மாநகராட்சியின் தூய்மைப் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# அரசுப் பேருந்து எல்இடி பலகையில் இந்தியில் வரவேற்பு வாசகம்: தஞ்சாவூரில் தமிழ் ஆர்வலர்கள் அதிர்ச்சி



தஞ்சாவூர், ஜன.19-

அரசுப் பேருந்து எல்இடி பலகையில் இந்தி மொழியில் வரவேற்பு வாசகம் இடம் பெற்றுள்ளது தமிழ் ஆர்வலர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழக தஞ்சாவூர் புறநகர் பேருந்து பணிமனையில் இருந்து திருச்சிதஞ்சாவூர் கும்பகோணம் வழித்தடத்தில் இயக்கப்படும் ஒரு அரசுப் பேருந்தின் உள் பகுதியில் உள்ள எல்இடி பலகையில் பயணிகளை வரவேற்கும் வகையில் நல்வரவு, வெல்கம் என தமிழ், ஆங்கில மொழிகளுடன், இந்தியிலும் வாசகம் இடம் பெற்றிருந்தது.

தமிழகத்தில் தமிழ், ஆங்கிலம் என இரு மொழிக்கொள்கை தான் இருக்கும், 3வது மொழிக்கு இடமில்லை என்று தமிழக அரசு உறுதியாக கூறி வரும் நிலையில், அரசுப் பேருந்தில் தமிழ், ஆங்கிலத்துடன் இந்தியும் இடம் பெற்றிருப்பது தமிழ் ஆர்வலர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அந்தப் பேருந்தின் நடத்துநர், ஓட்டுநரிடம் கேட்டபோது, ‘‘அதுகுறித்து எங்களுக்கு எதுவும் தெரியாது’’ என்றனர். சமூக செயல்பாட்டாளரும், தமிழ் ஆர்வலருமான வி.ஜீவக்குமார் கூறும்போது, “தமிழகத்தில் இரு மொழிக் கொள்கையை மீறி, அரசுப் பேருந்தில் இந்தி மொழியும் இடம் பெற்றிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. இதனால் அரசுப் போக்குவரத்துக் கழகமும் மறைமுகமாக இந்தியை ஆதரிக்கிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. இது தொடர்பாக தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்’’ என்றார்.

மாற்ற நடவடிக்கை: அரசுப் போக்குவரத்து கழக அதிகாரிகளிடம் கேட்டபோது, ‘‘புதிதாக வாங்கப்பட்ட அரசுப் பேருந்துகள் வடமாநிலத்தில் இருந்து வந்துள்ளதால், அவற்றில் இந்தி மொழியில் வார்த்தைகள் இடம் பெற்றிருக்கலாம். அதை உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்’’ என்றனர்.

# டெல்லி புறப்பட்டார் விஜய்: நாளை சிபிஐ அலுவலகத்தில் 2ஆம் கட்ட விசாரணை!



சென்னை, ஜன.19-

கரூர் கூட்ட நெரிசல் விவகாரம் தொடர்பாக சிபிஐ தலைமை அலுவலகத்தில் 2 வது முறையாக விசாரணைக்கு ஆஜராவதற்காக தவெக தலைவர் விஜய் இன்று டெல்லி புறப்பட்டார். நாளை டெல்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் அதிகாரிகள் விஜய்யிடம் விசாரணை நடத்தவுள்ளனர்.

கரூர் மாவட்டம் வேலுசாமிபுரத்தில் கடந்த 2025 செப்.27ம் தேதி தவெக தலைவர் விஜய் கலந்துகொண்ட பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். 110க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில், இந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது. சம்பவம் நடந்த வேலுசாமிபுரத்தில் ஆய்வு மேற்கொண்டும், 200க்கும் மேற்பட்டோரிடம் விசாரணை நடத்தியும் பல்வேறு ஆதாரங்களை சிபிஐ அதிகாரிகள் திரட்டினர்.

இதற்கிடையே, டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் ஜன.12ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு விஜய்க்கு சிபிஐ கடந்த 6ம் தேதி சம்மன் அனுப்பியது. இதனையடுத்து டெல்லியில் உள்ள சிபிஐ தலைமை அலுவலகத்தில் விஜய் ஜனவரி 12ஆம் தேதி ஆஜரானார். அவரிடம் அதிகாரிகள் பல்வேறு கேள்விகளை எழுப்பினர். குறிப்பாக, மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்காக திட்டமிடப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் என்ன? இதுதொடர்பாக காவல் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திடம் என்னென்ன தகவல்கள் பரிமாறப்பட்டன? 10 ஆயிரம் பேருக்கு அனுமதி வாங்கப்பட்ட நிலையில், 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டதா?. திட்டமிட்ட நேரத்தைவிட சுமார் 7 மணி நேரம் தாமதமாக வந்தது ஏன்? உங்கள் வருகை தாமதம் ஆனதால் மக்கள் நீண்ட நேரம் காத்திருந்ததே நெரிசலுக்கு காரணம் என்ற புகாருக்கு உங்கள் விளக்கம் என்ன? என்பது உட்பட பல கேள்விகளை அதிகாரிகள் எழுப்பினர்.

விஜய் அளித்த பதில்களை சிபிஐ அதிகாரிகள் எழுத்துப்பூர்வமாகவும், வீடியோவாகவும் பதிவு செய்து கொண்டனர். அன்று மாலை 6.15 மணி அளவில் விசாரணை முடிந்த பிறகு, காரில் விஜய் புறப்பட்டுச் சென்றார். விஜய்யிடம் சிபிஐ சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தியது. இதனையடுத்து, அடுத்தகட்ட விசாரணைக்காக ஜன.19ம் தேதி டெல்லியில் மீண்டும் ஆஜராகுமாறு விஜய்க்கு சிபிஐ சம்மன் அனுப்பியது. எனவே, சிபிஐ அலுவலகத்தில் 2 ஆம் கட்ட விசாரணைக்காக விஜய் இன்று சென்னையிலிருந்து தனி விமானம் மூலம் டெல்லி புறப்பட்டார். நாளை அவர் டெல்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராகவுள்ளார்.

# திமுக தேர்தல் அறிக்கையில் கூறியபடி பணி நிரந்தரம் செய்யப்படுமா? சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள் எதிர்பார்ப்பு



சென்னை, ஜன.19-

திமுக கடந்த தேர்தல் அறிக்கையில் கூறியபடி பணி நிரந்தரம் செய்வார்களா என சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். தொகுப்பூதியத்தில் பணி நியமனம் செய்யும் அரசாணை 95ஐ ரத்து செய்ய செய்ய வேண்டும். குடும்ப பாதுகாப்புடன் கூடிய ஓய்வூதியம் ரூ.9 ஆயிரம் வழங்க வேண்டும்.


தொடரும் போராட்டம்: ஓய்வு பெறும்போது பணிக்கொடையாக ரூ.5 லட்சம் வழங்க வேண்டும். 66 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். காலைச் சிற்றுண்டி திட்டத்தை சத்துணவு ஊழியர்களை கொண்டு செயல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் உள்ள சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.நடவடிக்கை

எடுக்கவில்லை: குறிப்பாக திமுக தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் தீவிரமாக வலியுறுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு சத்துணவு னவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் விசாலாட்சி கூறுகையில், தமிழகத்தில் பணியாற்றும் சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்களை அரசுப் பணியாளர்களாக பணியமர்த்தி காலமுறை ஊதியம் வழங்கப்படும். அவர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமும் பணிக்கொடையும் வழங்கப்படும் என திமுக தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தனர். ஆனால், கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை.இந்த கோரிக்கையை வலியுறுத்தி போராட்டங்களில் ஈடுபட்டும் றுத்தி பல்வேறு அரசு செவிசாய்க்கவில்லை. எனவே. இக்கோரிகையை வலியுறுத்தி வரும் 20ம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

# போலி வாக்காளர் சேர்ப்பு விவகாரத்தில் சிக்கிய சஸ்பெண்ட் அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கை வேண்டாம்

## தேர்தல் ஆணையத்திற்கு மேற்குவங்க அரசு கடிதம்



கொல்கத்தா, ஜன.19-

போலி வாக்காளர் சேர்க்கை விவகாரத்தில் சிக்கிய தேர்தல் அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்வதை கைவிடுமாறு தேர்தல் ஆணையத்திடம் மேற்கு வங்க அரசு கோரிக்கை விடுத்துள்ளது. மேற்கு வங்கத்தில் வரவிருக்கும் சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்காளர் பட்டியலில், மொய்னா மற்றும் பருய்பூர் கிழக்கு ஆகிய தொகுதிகளில் போலியான வாக்காளர்கள் சேர்க்கப்பட்டதாக புகார்கள் எழுந்தன. இது தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வில், தேர்தல் பதிவு அதிகாரிகள் தேபோத்தம் தத்தா சவுத்ரி, பிப்லப் சர்க்கார் மற்றும் உதவி தேர்தல் பதிவு அதிகாரிகள் ததாகதா மண்டல், சுதிப்தா தாஸ் ஆகிய நான்கு அதிகாரிகளும், சுராஜ் ஹால்டர் என்ற ஒப்பந்த கணினி பதிவாளரும் முறைகேட்டில் ஈடுபட்டது தெரியவந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையம் இவர்கள் ஐந்து பேர் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவிட்டிருந்ததுடன், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பணியிடை நீக்கம் செய்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அதிகாரிகளின் மீதான கிரிமினல் நடவடிக்கையை கைவிடக்கோரி நேற்று மேற்கு வங்க உள்துறை அமைச்சகம் தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் எழுதியுள்ளது. அதில், ‘நிர்வாக நடைமுறை தவறுகளுக்காக அதிகாரிகள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுப்பது சரியானதல்ல. அவர்கள் ஏற்கனவே பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதால் துறை ரீதியான நடவடிக்கையே போதுமானது’ என்று சட்ட ஆலோசனையை சுட்டிக்காட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்தால், தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள மற்ற அதிகாரிகளின் மனநிலை பாதிக்கப்படும் என அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர். அரசின் கோரிக்கை டெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், தற்போது வரை இவர்கள் மீது காவல்துறை வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# முட்டை ஒன்றின் பண்ணைக் கொள்முதல் விலை ஒரே நாளில் 30 காசு குறைத்து ரூ.5ஆக நிர்ணயம்

நாமக்கல், ஜன.19-

முட்டை ஒன்றின் பண்ணைக் கொள்முதல் விலை ஒரே நாளில் 30 காசு குறைத்து ரூ.5ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2 நாட்களில் முட்டை கொள்முதல் விலை 60 காசு குறைந்துள்ளது.




# சத்தீஸ்கர் என்கவுன்ட்டரில் 2 நக்சலைட்டுகள் உயிரிழப்பு

பிஜாப்பூர், ஜன.19-

சத்தீஸ்கர் மாநிலம் பிஜாப்பூர் மாவட்டத்தின் தென்மேற்கு வனப் பகுதியில் நக்சலைட்டுகள் நடமாட்டம் இருப்பதாக ரகசியத் தகவல் அதிரடிப் படையினருக்குக் கிடைத்தது.இதன் அடிப்படையில் மாவட்ட ரிசர்வ் காவல் படை, சிறப்பு அதிரடிப்படை, கோப்ரா படையினர் ஆகியோர் இணைந்து நேற்று முன்தினம் முதல் அப்பகுதியில் நக்சலைட் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

நேற்று காலை வனப் பகுதியில் பதுங்கியிருந்த நக்சல்கள், போலீஸாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இதையடுத்து போலீஸாரும் துப்பாக்கியால் திருப்பிச் சுட்டனர். இந்தத் துப்பாக்கிச் சண்டை நீண்ட நேரம் நீடித்தது. முடிவில், 2 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், அவர்களது உடல் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் போலீஸார் தெரிவித்தனர். மேலும் அவர்களிடம் இருந்து ஏகே 47 ரகத்தைச் சேர்ந்த துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# நச்சு வேதிப்பொருள் கண்டறியப்பட்டுள்ளதால் அல்மாண்ட் கிட் சிரப் தமிழகத்தில் விற்க தடை




சென்னை, ஜன.19-

அல்மாண்ட் கிட் சிரப் எனும் மருந்தில் எதிலீன் கிளைகால் என்ற நச்சு வேதிப்பொருள் கண்டறியப்பட்டுள்ளதால் விற்பனையில் இருந்து நீக்குமாறு தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: பீகார் மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட ‘அல்மாண்ட் கிட்’ சிரப்பில் எதிலீன் கிளைகால் என்ற உயிர்க்கொல்லி நச்சு வேதிப்பொருள் கலப்படமானது கண்டறியப்பட்டு உள்ளது. ‘அல்மாண்ட் கிட் சிரப்’ மருந்தை உட்கொண்டால் கடுமையான உடல்நலக்கேடுகளை ஏற்படுத்தக்கூடும். எனவே, இந்த மருந்தை வாங்குதல், விற்பனை செய்தல் மற்றும் உட்கொள்வதற்கு தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் தடை செய்துள்ளது. மேற்கூறிய மருந்தில் உள்ள எதிலீன் கிளைக்கால் என்ற நச்சு வேதிப்பொருள் சிறுநீரக செயலிழப்பு, மூளை, நுரையீரல் போன்ற வேறு உறுப்புகளையும் பாதிப்படையச் செய்து இறப்பை ஏற்படுத்தக்கூடும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சில்லரை விற்பனையாளர்கள், வினியோகஸ்தர்கள், ஆஸ்பத்திரிகள் மற்றும் மருந்தகங்கள் இந்த மருந்தை உடனடியாக விற்பனையில் இருந்து நீக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், இந்த மருந்து வினியோகிக்கப்பட்டாலோ அல்லது விற்பனை செய்யப்பட்டாலோ உடனடியாக அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். நுகர்வோர்கள் மருந்துகள் வாங்கும்போது பேட்ச் எண்களை (ஏ.எல்.24002) சரிபார்த்து அதன் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும். இந்த மருந்தை வைத்திருப்பவர்கள் அதை முறையாக அழிக்க அதிகாரிகளை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இம்மருந்தின் வினியோகத்தைத் தடுக்க தமிழ்நாட்டில் உள்ள மருந்து கடைகள் மற்றும் ஆஸ்பத்திரிகளில் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஏதேனும் விளக்கங்கள், வழிகாட்டுதல்கள் மற்றும் புகார்களுக்கு தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு இயக்ககத்தின் 9445865400 என்ற வாட்ஸ் அப் எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சிரியாவில் அமெரிக்க படைகள் தாக்குதல்: அல் கொய்தா முக்கிய தலைவர் கொலை!



டமாஸ்கஸ், ஜன.19-

சிரியாவின் வடமேற்குப் பகுதியில் அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலில், டிசம்பர் மாதம் அமெரிக்க வீரர்களை கொன்ற ஐ.எஸ் பயங்கரவாதியுடன் தொடர்புடைய அல் கொய்தாவின் மூத்த தலைவர் கொல்லப்பட்டார்.

இது குறித்து அமெரிக்காவின் ராணுவ அமைப்பான சென்ட்காம் (CENTCOM) வெளியிட்ட அறிக்கையில், ’அமெரிக்கப் படைகள் ஜனவரி 16 அன்று இந்தத் தாக்குதலை நடத்தியது. இதில், பிலால் ஹசன் அல் ஜாசிம் என்ற அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டார். இவர், டிசம்பரில் அமெரிக்க வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு காரணமான ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார்.

அல்ஜாசிம் அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட ஐ.எஸ். பயங்கரவாதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தார். மேலும், அந்த பயங்கரவாத நடவடிக்கைகளைத் திட்டமிடுவதில் பங்கு வகித்தார். மூன்று அமெரிக்கர்களின் மரணத்துடன் தொடர்புடையவரின் மரணம், எங்கள் படைகளைத் தாக்கும் பயங்கரவாதிகளைத் துரத்திச் செல்வதில் எங்கள் உறுதியை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்கக் குடிமக்கள் மற்றும் எங்கள் போர்வீரர்கள் மீது தாக்குதல்களை நடத்துபவர்கள், திட்டமிடுபவர்கள் அல்லது தூண்டுபவர்களுக்கு பாதுகாப்பான இடம் எதுவும் இல்லை. நாங்கள் உங்களைக் கண்டுபிடிப்போம்‘‘ என்று சென்ட்காம் தளபதி அட்மிரல் பிராட் கூப்பர் கூறினார்.

சிரியாவின் பால்மைராவில் டிசம்பர் 13 அன்று நடந்த பயங்கரவாத தாக்குதலில் இரண்டு அமெரிக்கப் படைவீரர்களும், ஒரு அமெரிக்க மொழிபெயர்ப்பாளரும் கொல்லப்பட்டனர். மேலும் சில அமெரிக்க மற்றும் சிரியப் பணியாளர்கள் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து, சென்ட்காம் ‘ஹாக்ஐ ஸ்ட்ரைக்‘ என்ற பெயரிடப்பட்ட நடவடிக்கையின் மூலம் சிரியா முழுவதும் பெரிய அளவிலான தாக்குதல்களைத் தொடங்கியது. இந்த நடவடிக்கையின் கீழ், அமெரிக்கப் படைகள் 100க்கும் மேற்பட்ட ஐ.எஸ். உள்கட்டமைப்பு மற்றும் ஆயுதத் தளங்களை இலக்காகக் கொண்டு, 200க்கும் மேற்பட்ட துல்லியமான தாக்குதல்களை நடத்தியது.

கடந்த ஓராண்டில், அமெரிக்க மற்றும் கூட்டாளிப் படைகள் சிரியா முழுவதும் 300க்கும் மேற்பட்ட ஐ.எஸ் பயங்கரவாதிகளைக் கைது செய்துள்ளன. மேலும் 20க்கும் மேற்பட்டோரைக் கொன்றுள்ளன.

டமாஸ்கஸ்: சிரியாவின் வடமேற்குப் பகுதியில் அமெரிக்க ராணுவம் நடத்திய தாக்குதலில், டிசம்பர் மாதம் அமெரிக்க வீரர்களை கொன்ற ஐ.எஸ் பயங்கரவாதியுடன் தொடர்புடைய அல் கொய்தாவின் மூத்த தலைவர் கொல்லப்பட்டார்.

இது குறித்து அமெரிக்காவின் ராணுவ அமைப்பான சென்ட்காம் (CENTCOM) வெளியிட்ட அறிக்கையில், ’அமெரிக்கப் படைகள் ஜனவரி 16 அன்று இந்தத் தாக்குதலை நடத்தியது. இதில், பிலால் ஹசன் அல் ஜாசிம் என்ற அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டார். இவர், டிசம்பரில் அமெரிக்க வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு காரணமான ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார்.

அல்ஜாசிம் அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட ஐ.எஸ். பயங்கரவாதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தார். மேலும், அந்த பயங்கரவாத நடவடிக்கைகளைத் திட்டமிடுவதில் பங்கு வகித்தார். மூன்று அமெரிக்கர்களின் மரணத்துடன் தொடர்புடையவரின் மரணம், எங்கள் படைகளைத் தாக்கும் பயங்கரவாதிகளைத் துரத்திச் செல்வதில் எங்கள் உறுதியை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்கக் குடிமக்கள் மற்றும் எங்கள் போர்வீரர்கள் மீது தாக்குதல்களை நடத்துபவர்கள், திட்டமிடுபவர்கள் அல்லது தூண்டுபவர்களுக்கு பாதுகாப்பான இடம் எதுவும் இல்லை. நாங்கள் உங்களைக் கண்டுபிடிப்போம்" என்று சென்ட்காம் தளபதி அட்மிரல் பிராட் கூப்பர் கூறினார்.

சிரியாவின் பால்மைராவில் டிசம்பர் 13 அன்று நடந்த பயங்கரவாத தாக்குதலில் இரண்டு அமெரிக்கப் படைவீரர்களும், ஒரு அமெரிக்க மொழிபெயர்ப்பாளரும் கொல்லப்பட்டனர். மேலும் சில அமெரிக்க மற்றும் சிரியப் பணியாளர்கள் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து, சென்ட்காம் 'ஹாக்ஐ ஸ்ட்ரைக்' என்ற பெயரிடப்பட்ட நடவடிக்கையின் மூலம் சிரியா முழுவதும் பெரிய அளவிலான தாக்குதல்களைத் தொடங்கியது. இந்த நடவடிக்கையின் கீழ், அமெரிக்கப் படைகள் 100க்கும் மேற்பட்ட ஐ.எஸ். உள்கட்டமைப்பு மற்றும் ஆயுதத் தளங்களை இலக்காகக் கொண்டு, 200க்கும் மேற்பட்ட துல்லியமான தாக்குதல்களை நடத்தியது.

கடந்த ஓராண்டில், அமெரிக்க மற்றும் கூட்டாளிப் படைகள் சிரியா முழுவதும் 300க்கும் மேற்பட்ட ஐ.எஸ் பயங்கரவாதிகளைக் கைது செய்துள்ளன. மேலும் 20க்கும் மேற்பட்டோரைக் கொன்றுள்ளன.

# பொங்கல் பண்டிகை விடுமுறை முடிந்து சென்னைக்கு படையெடுத்து வரும் வாகனங்கள்: மதுராந்தகத்தில் 5 கி.மீ. போக்குவரத்து நெரிசல்



சென்னை, ஜன.19-

பொங்கல் தொடர் விடுமுறை முடிந்து பொதுமக்கள் சென்னைக்கு திரும்புவதால் அனைத்து முக்கிய சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பேருந்துகள், ரயில்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. பொங்கல் பண்டிகையையொட்டி, ஜனவரி14 முதல் 18ம் தேதி வரை தொடர்ச்சியாக 5 நாட்கள் தமிழக அரசு விடுமுறை அளித்தது. பொதுவாக பண்டிகை காலங்களில் சென்னையில் கல்வி, தொழில், வேலை நிமித்தமாக தங்கி இருக்கும் லட்சக்கணக்கான மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு படையெடுப்பது வழக்கம். அந்த வகையில் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமிழகத்தில் தொடர்ந்து விடுமுறை அளிக்கப்பட்டதால் சென்னையில் இருந்து லட்சக்கணக்கான மக்கள் தங்களது சொந்த ஊர்களுக்கு பயணம் செய்தனர்.

சொந்த ஊர் சென்ற மக்களின் வசதிக்காக ஆயிரக்கணக்கான சிறப்பு பஸ்கள் மற்றும் ரயில்கள் இயக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களது சொந்த வாகனங்களில் சென்னையில் இருந்து தங்களுக்கு சொந்த ஊர்களுக்கு பயணம் செய்தனர். இந்த நிலையில் தைப்பொங்கல் கொண்டாட்டங்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து, லட்சக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த ஊர்களிலிருந்து சென்னைக்கு திரும்பத் தொடங்கியுள்ளனர். நேற்று காணும் பொங்கல் முடிந்து, இன்று மதியம் முதலே சென்னை நோக்கி பயணிகள் கூட்டம் அதிகரித்துள்ளது. இதனால், சாலைகள், ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றில் கடும் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கார், வேன் உள்ளிட்ட வாகனங்களில் மக்கள் சென்னைக்கு திரும்பிய வண்ணம் உள்ளனர். அனைத்து வாகனங்களும் ஒரே நேரத்தில் உளுந்தூர்பேட்டை சுங்கச்சாவடிக்கு வந்த போது போக்குவரத்து நெரிசல் காரணமாக நீண்ட வரிசையில் அணிவகுத்து ஊர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. போக்குவரத்து நெரிசலை தவிர்க்க டோல்கேட் நிர்வாகத்தின் சார்பில் கூடுதலாக இரண்டு கவுன்டர்கள் திறக்கப்பட்டு வாகனங்கள் அனைத்தும் அனுப்பி வைக்கப்பட்டன. போக்குவரத்து நெரிசலை தவிர்க்க போக்குவரத்து போலீசார் மாற்று ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

அண்டை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இன்று பிற்பகலில் இருந்தே தங்கள் சொந்த வாகனங்கள் மற்றும் அரசுப் பேருந்து மற்றும் தனியார் பேருந்துகளின் மூலம் சென்னை நோக்கி அதிக எண்ணிக்கையில் வரத்தொடங்கினார். இதன் காரணமாக ஜிஎஸ்டி சாலையில் வண்டலூர், பெருங்களத்தூர், தாம்பரம், குரோம்பேட்டை ஆகிய பகுதிகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பல இடங்களில் நீண்ட தொலைவுக்கு வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இதனால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.



# ஈரானில் வன்முறைகளில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 5,000ஐ கடந்தது

ஈரானில், ஜன.19-

அரசுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களில் ஏற்பட்ட வன்முறைகளில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 5,000ஐ கடந்தது. பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு உள்ளிட்டவற்றை கண்டித்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடந்து வருகின்றன. குர்திஷ் மக்கள் அதிகம் வாழும் வடமேற்கு ஈரானில் அதிக உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

# திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் 4 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம்

திருவண்ணாமலை, ஜன.19-

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில், ஆண்டுதோறும் தை 2ம் நாளன்று திருவூடல் திருவிழா நடைபெறும். அண்ணாமலையார், உண்ணாமலையம்மன் இடையே ஏற்படும் ஊடலையும், கூடலையும் விளக்கும் வகையில் இந்த விழா நடைபெற்று வருகிறது. அதன்படி, நேற்று முன்தினம் திருவண்ணாமலை திருமஞ்சன கோபுர வீதியில் திருவூடல் விழா நடந்தது. அதில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். ஊடல் காரணமாக, குமரக்கோயிலில் சுவாமி இரவில் தங்கும் நிகழ்வும், தொடர்ச்சியாக, நேற்று அதிகாலை அண்ணாமலையார் கிரிவலம் சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தார். இதைத்தொடர்ந்து நேற்று மாலை சுவாமிக்கும் அம்மனுக்கும் இடையே ஏற்பட்ட ஊடல் தீர்ந்ததற்கான மறுவூடல் நிகழ்ச்சி நடந்தது. விழாவில், ஏராளமான பக்தர்கள் தரிசனம் செய்தனர்.இந்நிலையில் தை அமாவாசையான இன்று அதிகாலை அண்ணாமலையார், உண்ணாமுலையம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜை நடந்தது. கோயிலில் தரிசனத்திற்காக அதிகாலை முதல் ஏராளமான பக்தர்கள் குவிந்தனர். இவர்கள் கோயிலுக்கு வெளியே நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்தனர். சுவாமி தரிசனம் செய்ய சுமார் 4 மணி நேரம் ஆனது. பக்தர்கள் வருகை காரணமாக மாட வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அண்ணாமலையார் கோயிலில் நடைபெறும் விழாக்களில் முக்கியமானது தீர்த்தவாரி. அதன்படி, ஆண்டுக்கு 3 முறை, 3 ஆறுகளில் அண்ணாமலையார் தீர்த்தவாரி நடப்பது வழக்கம். ரதசப்தமி நாளில் செய்யாற்றிலும், மாசி மகம் திருநாளில் பள்ளிகொண்டாப்பட்டு கவுதம நதியிலும், திருவூடல் திருவிழா முடிந்ததும் தை மாதம் 5ம்நாளன்று தென்பெண்ணை ஆற்றிலும் அண்ணாமலையார் தீர்த்தவாரி நடைபெறுவது வழக்கம்.அதன்படி தை மாதம் 5ம் நாளான நாளை கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை பகுதி தென்பெண்ணையாற்றில் தீர்த்தவாரி நடைபெற உள்ளது. அன்று அதிகாலை சந்திரசேகரர் திருவடிவாக அண்ணாமலையார் தென்பெண்ணைக்கு புறப்படுகிறார். அப்போது, வழிநெடுகிலும் உள்ள கிராமங்களில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமிக்கு மண்டகபடி செலுத்துவார்கள். தென்பெண்ணையாற்றில் நடைபெறும் தீர்த்தவாரியில், மணலூர்பேட்டை விநாயகர், மாரியம்மன், செல்லியம்மன், முத்துமாரியம்மன், சிவகாம சுந்தரி சமேத அகத்தீஸ்வரரும் அண்ணாமலையாருடன் எழுந்தருள்வார்கள். தீர்த்தவாரி முடிந்து, நாளை மறுநாள் (20ம் தேதி) மீண்டும் அண்ணாமலையார் கோயிலுக்கு எழுந்தருள்வார்.

# “அசாம் சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸுக்கு தோல்வி காத்திருக்கிறது” : பிரதமர் மோடி



நாகான், ஜன.19-

இந்த ஆண்டு நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலின்போது அசாம் மக்களிடமிருந்தும் காங்கிரஸுக்கு ஒரு கடுமையான பதில் கிடைக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.

நாகான் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காசிரங்கா மேம்பாலத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டியும், இரண்டு புதிய அம்ரித் பாரத் விரைவு ரயில்களைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தும் பேசிய பிரதமர் மோடி, "ஆட்சியை பிடிப்பதற்காகவும், வாக்குகளைப் பெறுவதற்காகவும் காங்கிரஸ் கட்சி அசாமின் மண்ணை ஊடுருவல்காரர்களிடம் ஒப்படைத்தது. காங்கிரஸ் கட்சி பல ஆண்டுகளாக அசாமில் ஆட்சியில் இருந்தது. ஆனால் அந்த காலகட்டத்தில் ஊடுருவல் அதிகரித்துக்கொண்டே இருந்தது.

காங்கிரஸுக்கு ஒரே ஒரு கொள்கைதான் உள்ளது, ஊடுருவல்காரர்களைக் காப்பாற்றுவது. ஊடுருவல்காரர்களின் உதவியுடன் அதிகாரத்தைப் பெறுவது. நாடு முழுவதும் காங்கிரஸும், அதன் கூட்டணிக் கட்சிகளும் இதைத்தான் செய்து வருகின்றன.

பிஹாரிலும், அவர்கள் ஊடுருவல்காரர்களைப் பாதுகாக்க பேரணிகளையும் ஆர்ப்பாட்டங்களையும் ஏற்பாடு செய்தனர். ஆனால் பிஹார் மக்கள் காங்கிரஸை முற்றிலுமாகத் துடைத்தெறிந்தனர். இப்போது அசாம் மக்களின் முறை. அசாம் மண்ணிலிருந்தும் காங்கிரஸுக்கு ஒரு கடுமையான பதில் கிடைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இப்போது அசாமில், பாஜக அரசாங்கம் ஊடுருவல் பிரச்சினையை திறம்படக் கையாண்டு வருகிறது. மேலும் உங்கள் நிலத்தை சட்டவிரோத ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்து வருகிறது. சமீபத்தில் வந்துள்ள தேர்தல் முடிவுகளில், மக்களின் ஆணை மிகவும் தெளிவாக உள்ளது. இப்போது வாக்காளர்கள் நல்லாட்சியையும், வளர்ச்சியையும் விரும்புகிறார்கள். அதனால்தான் நாங்கள் மும்பையில் வெற்றிபெற்றதற்கான கொண்டாட்டங்கள் காசிரங்காவில் நடைபெறுகின்றன.

காசிரங்கா ஒரு தேசியப் பூங்கா மட்டுமல்ல, அது அசாமின் ஆன்மா. ஒரு காலத்தில், காசிரங்காவில் காண்டாமிருக வேட்டை அசாமிற்கு ஒரு பெரிய கவலையாக இருந்தது. 201314 ஆம் ஆண்டில், டஜன் கணக்கான ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் கொல்லப்பட்டன. பாஜக அரசாங்கம் இதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தி, வனத்துறைக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கியது. இதன் விளைவாக, 2025 ஆம் ஆண்டில் காண்டாமிருகங்கள் வேட்டையாடப்பட்ட சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை” என்றார்



# திருவள்ளூர் அருகே கூவம் ஆற்றில் 50 சாமி சிலைகள் மீட்பு: பொதுமக்கள் குவிந்ததால் பரபரப்பு

திருவள்ளூர், ஜன.19-

திருவள்ளூர் அருகே கூவம் ஆற்றில் கிடந்த 50க்கும் மேற்பட்ட சாமி சிலைகளை மீட்டனர். இவற்றை பார்க்க பொதுமக்கள் திரண்டதால் பெரும் பரபரப்பு நிலவியது. இவற்றை வெளிநாடுகளுக்கு கடத்த பதுக்கிவைத்து இருந்தார்களா என போலீசார் விசாரிக்கின்றனர்.

திருவள்ளூர் அருகே கடம்பத்தூர் ஒன்றியம் பிஞ்சிவாக்கம் பகுதியை சேர்ந்தவர் முனுசாமி (38). இவர் இன்று காலையில் தனது பகுதியில் உள்ள கூவம் ஆற்றங்கரையோரம் சென்றுள்ளார். அப்போது ஆற்றின் கரையில் சில கற்சிலைகள் கிடப்பது பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார். அவர் கொடுத்த தகவல்படி, ஊர் மக்கள் திரண்டு வந்தனர். இதன் பின்னர் அனைவரும் கூவம் ஆற்றின் கரையோரம் தேடியபோது அடுத்தடுத்து முருகர், விநாயகர் மற்றும் ஐயப்பன் சிலைகள் உள்பட 50க்கும் மேற்பட்ட கற்சிலைகள் கிடப்பதை பார்த்து ஆச்சரியம் அடைந்தனர் அந்த சிலைகளை சேர்த்து ஒழுங்குப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். பெண்கள் உள்பட சிலர் சிலைகளை தொட்டு வணங்கினர்.

இதுபற்றி தகவல் கிடைத்ததும் திருவள்ளூர் கோட்டாட்சியர் சு.ரவிச்சந்திரன் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தார். அவரது உத்தரவின்படி, வட்டாட்சியர் எஸ்.பாலாஜி தலைமையில் கடம்பத்தூர் போலீசார் விரைந்துவந்து விசாரித்தனர். இதன்பின்னர் பொதுமக்களிடம் இருந்து சிலைகளை மீட்டு பாதுகாப்பாக கொண்டு சென்றனர்.

இது குறித்து திருவள்ளூர் தாலுகா போலீசார் வழக்குபதிவு செய்துள்ளனர். இந்த சிலைகள் எந்த கோயில்களில் திருடப்பட்டதா, வெளிநாடுகளுக்கு கடத்திச்செல்வதற்கு சிலை கடத்தல் கும்பல் பதுக்கிவைத்திருந்தார்களா என்று விசாரிக்கின்றனர்.

# இதுவரை 2.15 கோடி பேருக்கு வழங்கல் விடுபட்டவர்களுக்கு நாளை முதல் பொங்கல் பரிசு வினியோகம்

சென்னை, ஜன.19-

தமிழ்நாடு முழுவதும் இதுவரை 2.15 கோடி பேருக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது. விடுபட்டவர்கள் நாளை பொங்கல் பரிசு தொகுப்பை பெற்று கொள்ளலாம் என்று கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000 வழங்கப்படும்” எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி கடந்த 8ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, பட்ரோடு நியாய விலைக் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 24,924 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வந்தது. இதற்காக சுமார் 50,000க்கும் மேற்பட்ட கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அதன்படி இதுவரை 2.15 கோடி அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு ரூ.6453.54 கோடி ரொக்கம் வினியோகிக்கப்பட்டுள்ளது. அதாவது குறுகிய நாட்களுக்குள் 97% பணிகள் நிறைவு பெற்றுள்ளது. மேலும், மீதமுள்ள பயனாளிகளுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி நாளை முதல் வழங்கப்படுகிறது. விடுபட்ட குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசு தொகுப்பினை பெற்று பயன்பெறலாம் என்று தமிழக அரசின் கூட்டுறவுத்துறை அறிவித்துள்ளது.

# கோவளம் நன்னீர் தேக்க திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும்” சீமான்



சென்னை, ஜன.19-

கோவளம் நன்னீர்த் தேக்கத் திட்டத்தின் தொலைநோக்கு சிக்கல்களையும், அப்பகுதி மீனவ மக்களின் வாழ்வாதாரத்தினையும் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையை நிறைவேற்றவும், வெள்ள பாதிப்புகளைக் குறைக்கவும் எனும் காரணங்களுக்காக என்று முன்மொழியப்பட்டு, செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் மற்றும் திருக்கழுக்குன்றம் தாலுகாக்களில் கிழக்கு கடற்கரை சாலை (ECR) மற்றும் பழைய மகாபலிபுரம் சாலை (OMR) ஆகியவற்றுக்கு இடையே உள்ள கோவளம் துணை வடிநிலத்தில் ஒரு புதிய நன்னீர்த் தேக்கம் அமைக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

471 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் இந்தத் திட்டம், இப்பகுதியில் உள்ள 4375 ஏக்கர் பரப்பளவிலான உப்பங்கழி மற்றும் தாழ்வான நிலப்பகுதியைச் சுற்றி 30.6 கிலோமீட்டர் நீளத்திற்கு மண் கரைகளை அமைப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான கடற்கரை மண்டல மேலாண்மை அனுமதி கடந்த டிசம்பர் 3ம் தேதி (03122025) வழங்கப்பட்டது. நன்னீர்த் தேக்கத் திட்டங்கள் உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டியதும் பூமித்தாயின் நலனுக்கு இன்றியமையாததும் ஆகும். இருப்பினும் மேற்குறிப்பிட்ட இடத்தில் முன்மொழியப்பட்டுள்ள திட்டத்தின் பின்விளைவுகளை அரசு ஆராய்ந்திட வேண்டியது அவசியமாகும். இத்திட்டம் அந்தப் பகுதியின் சூழலியல் கட்டமைப்பையும், 16க்கும் மேற்பட்ட மீனவக் கிராமங்களின் வாழ்வாதாரத்தையும் வேரறுக்கும் ஒரு திட்டமாகும்.

கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிக்கை (CRZ Notification 2019, Annexure-IV) படி, மீன்பிடி இடங்கள் (பாடு) தெளிவாக வரைபடத்தில் குறிக்கப்பட வேண்டும். ஆனால், இத்திட்டத்திற்கான அனுமதியில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி இடங்கள் "வெற்று நிலம்" (Vacant Land) எனத் தவறாகக் காட்டப்பட்டுள்ளது. உப்பங்கழிகளில் காலம் காலமாக மீன்பிடித்து வரும் மீனவர்கள் மற்றும் பழங்குடி இருளர் மக்களின் வாழ்வாதார உரிமையை இத்திட்டம் பறிக்கிறது. மேலும் நூற்றாண்டு பழமை வாய்ந்த பக்கிங்காம் கால்வாயின் போக்கை மாற்றுவது மழைக்காலங்களில் நீரோட்டத்தைத் தடுத்து, பெரும் வெள்ளப்பெருக்கை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது. நெடுங்கால சீரழிவுகளில், கடலோடு கால்வாய் கொண்டுள்ள இயற்கை தொடர்பைத் துண்டிப்பது, கடல்சார் சூழலியல் சமநிலையைச் சீர்குலைக்கும்.

உப்பங்கழிகள் என்பது கடல் நீர் புகுந்து செல்லும் உவர்நீர் பகுதிகள். இங்கு நன்னீரைத் தேக்குவதால், இயற்கையான உப்புத்தன்மை மாறும். அதன் விளைவாக இறால் மற்றும் மீன்களின் இனப்பெருக்கச் சுழற்சியை அழித்துவிடும். இப்பகுதி பல புலம்பெயர் பறவைகளுக்கும், அரிதான கடல்வாழ் உயிரினங்களுக்கும் வாழ்விடமாகும். நன்னீர்த் தேக்கம் உருவானால், இந்த ஒட்டுமொத்த உயிரினச் சூழலும் அழிந்துவிடும்.

இதே பகுதியில் தமிழக அரசின் நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒரே இடத்தில் கடல்நீரைத் சுத்திகரிக்கும் தொழில்நுட்பத்தையும் வைத்துக்கொண்டு, இயற்கை உப்பங்கழிகளை அழிக்கும் வகையிலும் திட்டம் முன்மொழிவது எதற்கு என்கிற கேள்வி எழுகிறது. மறுபுறம், பாதிக்கப்பட்ட மக்களுடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடக்கும் முன்பே திட்டப்பணிகளுக்கான ஏற்பாடுகள் நடப்பது மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு எதிரான செயலாகும். சென்னையின் தண்ணீர் தேவையையும் வெள்ளநீர் வடிகால் முறையையும் சீரமைக்கவேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்காது. செம்பரம்பாக்கம், புழல், பூண்டி மற்றும் சோழவரம் ஆகிய ஏரிகளை நவீன தொழில்நுட்பத்துடன் தூர்வாருதல், பயன்பாட்டில் இருக்கும் நன்னீர்த் தேக்கங்களில் கழிவு நீர் மற்றும் குப்பை கலக்காது வழிவகுத்தல் மற்றும் கால்வாய்களைப் பராமரித்தாலே அதிக அளவில் நன்னீரைச் சேமிக்க முடியும். உப்பங்கழிகளை அழிக்காமல், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள சிறு ஏரிகளை ஆழப்படுத்துவதன் மூலம் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி, உப்பு நீர் ஊடுருவலைத் தடுக்கலாம். வளர்ச்சி என்பது நிலத்தையும், வளத்தையும் மேலும் அந்த நிலத்தைச் சார்ந்து வாழும் மனிதர்களையும் உள்ளடக்கியது. 16 கிராம மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பலிகொடுத்து உருவாக்கப்படும் இந்த நன்னீர்த் தேக்கம், சூழலியல் மீட்டுருவாக்கத்திற்குப் பதிலாக அழிவுக்கே இட்டுச்செல்லும். எனவே, அரசு உடனடியாக இத்திட்டத்தை கைவிட்டு மாற்று வழிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் சார்பாக வலியுறுத்துகின்றேன்' எனத் தெரிவித்துள்ளார்.



■ தமிழர் திருநாள் தை பொங்கல் முன்னிட்டு பாரதிய ஜனதா கட்சி திருப்பூர் தெற்கு மாவட்ட உடுமலை மத்திய ஒன்றியம் இளைஞர் அணி நடத்தும் மாபெரும் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான கால்பந்து போட்டி நடைபெற்றது இந்நிகழ்ச்சியை உடுமலை மத்திய ஒன்றிய தலைவர் ஙி.லோகேஷ் அவர்களின் முன்னிலையிலும், இளைஞர் அணி மாவட்ட தலைவர் ஷி. விஷ்ணு கார்த்திக் தலைமையிலும், இந்நிகழ்ச்சியை திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் முனைவர் மோகனப்பிரியா சரவணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வந்து போட்டியை துவங்கி வைத்தார்கள் மேலும் விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த மத்திய இளைஞர் அணி ஒன்றிய தலைவர் R. உதயகுமார் மற்றும் இளைஞர் அணி பொதுச் செயலாளர் செல்வகுமார் மற்றும் முத்து விக்னேஷ்.. மற்றும் மாவட்டச் செயலாளர் சுப்ரமணியம் கலந்து கொண்டனர்.

# வங்கதேசத்தில் இந்து இளைஞர் படுகொலை: இனரீதியான தாக்குதலா என விசாரணை

டாக்கா ஜன.19-

வங்கதேசத்தில் உள்ள எரி பொருள் நிரப்பும் மையத்தில் இந்து இளைஞர் ஒருவர் கார் ஏற்றி படுகொலை செய்யப்பட்டார். இது இனரீதியான தாக்குதலா என போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.வங்கதேசத்தின் கோலண்டா மோர் என்ற பகுதியில் கரிம் என்ற பெயரில் எரிபொருள் நிரப்பும் மையம் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் காலை நான்கரை மணிக்கு கருப்பு நிற எஸ்யுவி வாகனம் ஒன்று எரிபொருள் நிரப்ப வந்தது. எரிபொருள் நிரப்பிய பின் பணம் செலுத்தாமல் டிரைவர் வாகனத்தை எடுக்க முயன்றார். அப்போது அங்கு பணியில் இருந்த இந்து இளைஞர் ரிபன் சாகா (30) கார் முன் நின்று மறித்தார். ஆனால் அவர் மீது கார் மோதியது. அவரது உடல் நெடுஞ்



சாலையில் இழுத்துச் செல்லப்பட்டது.இதைப் பார்த்த ஜாகிர் உசைன் என்ற மற்றொரு ஊழியர் கார் பின்னால் ஓடினார். அப்போது ரிபன் சாகாவின் உடல் தலை மற்றும் முகத்தில் பலத்த காயங்களுடன் நெடுஞ்சாலையில் கிடந்தது. இச்சம்பவம் குறித்து ராஜ்பாரி சதார் போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். தப்பிச் சென்ற காரை பறிமுதல் செய்த போலீஸார், அதன் உரிமையாளர் அப்துல் காசிம், ஓட்டுநர் கமல் உசைன் ஆகியோரை கைது செய்துள்ளனர். இவர்களில் அப்துல் காசிம் வங்கதேச தேசிய கட்சியின் ராஜ்பாரி மாவட்ட முன்னாள் பொருளாளர் என்பது தெரியவந்துள்ளது. வாகனத்தை ஓட்டிச் சென்றது யார்? இச்சம்பவத்துக்கு இனரீதியான தாக்குதல் காரணமா என போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

வங்கதேசத்தில் சிறுபான்மையினராக இருக்கும் இந்துக்கள் மீது சமீப காலமாக தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# திருச்சி, நாகர்கோவிலுக்கு இரண்டு அம்ரித் பாரத் ரயில்கள்

சென்னை, ஜன.19-

மேற்குவங்கம் நியூ ஜல்பைகுரி நாகர்கோவில், நியூ ஜல்பைகுரி திருச்சி இடையே என 2 அம்ரித் பாரத் ரயில் சேவைகள் நேற்று தொடங்கி வைக்கப்பட்டன. இதன் விவரம் வருமாறு:

நியூஜல்பைகுரி நாகர்கோவில் அம்ரித் பாரத் ரயிலில் 8 இரண்டாம் வகுப்பு தூங்கும் வசதி கொண்ட பெட்டிகள், 11 பொதுப் பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ரயில் நியூஜல்பைகுரியில் புறப்பட்டு பாலசோர், கட்டாக், புவனேஸ்வர், விஜயவாடா, கூடூர், ரேணிகுண்டா, காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர், கோவை, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பழநி, திண்டுக்கல்,




மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி வழியாக நாகர்கோவிலை அடையும். இந்த ரயிலின் முதல் சேவை நாகர்கோவிலில் இருந்து ஜன.25ம் தேதியும் நியூஜல்பைகுரியில் இருந்து ஜன.28ம் தேதியும் தொடங்கும்.

நியூஜல்பைகுரி திருச்சி அம்ரித் பாரத் ரயில் நியூஜல்பைகுரியில் புறப்பட்டு பாலசோர், கட்டாக், புவனேஸ்வர், விஜயவாடா, கூடூர், சென்னை எழும்பூர், தாம்பரம், செங்கல்பட்டு, விழுப்புரம், திருப்பாதிரிபுலியூர், சிதம்பரம், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர் வழியாக திருச்சியை அடையும். இந்த ரயிலின் முதல் சேவை திருச்சியில் ஜன.28ம் தேதியும், நியூ ஜல்பைகுரியில் இருந்து ஜன.30ம் தேதியும் தொடங்கும்.

# சபரிமலை தங்கம் திருட்டு வழக்கு: அறிவியல்பூர்வ ஆய்வு அறிக்கை எஸ்ஐடியிடம் ஒப்படைப்பு

கொல்லம், ஜன.19-

சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கம் மாயமான விவகாரத்தில் அறிவியல் பூர்வ அறிக்கையை நீதிமன்றம் எஸ்ஐடியிடம் ஒப்படைத்துள்ளது.

கேரள உயர் நீதிமன்ற உத்தரவின்படி, விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் இந்த அறிவியல் ஆய்வை மேற்கொண்டது. இந்த அறிக்கை ஒரு சீல் வைக்கப்பட்ட உறையில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமையன்று லஞ்ச ஒழிப்பு நீதிமன்றம் இந்த அறிக்கையை, சபரிமலை தங்க இழப்பு வழக்கை விசாரிக்கும் சிறப்பு புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைத்துள்ளது.

2019ம் ஆண்டு முதன்மை குற்றவாளியான உண்ணிகிருஷ்ணன் போற்றி என்பவர், புனரமைப்புப் பணிகளுக்காகக் கொண்டு சென்ற செப்புத் தகடுகளில் இருந்த தங்கத்தின் தன்மையை, அதற்கு முன்பும் பின்பும் ஒப்பிட்டுப் பார்க்க இந்த அறிவியல் ஆய்வுக்கு உயர் நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.ஐயப்பன் கோயிலின் துவாரபாலகர் சிலைகள் மற்றும் கோயில் (கருவறை) கதவு சட்டங்களில் இருந்து தங்கம் காணாமல் போனது குறித்து சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது. இந்த இரண்டு வழக்குகளிலும் இதுவரை முதன்மை குற்றவாளி உண்ணிகிருஷ்ணன் போற்றி மற்றும் திருவிதாங்கூர் தேவஸ்வம் போர்டின் முன்னாள் தலைவர்கள் இருவர் உட்பட 12 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர்

# காந்தி கிராம பல்கலைக்கழகத்தை மத்திய பல்கலைக் கழகமாக தரம் உயர்த்த வேண்டும் திண்டுக்கல் எம்.பி. ஆர். சச்சிதானந்தம்

சின்னாளபட்டி, ஜன 19-

திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் நிருபர்களுக்கு பேட்டியளித்தபோது கூறியதாவது :

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள ஒரே பல்கலைக்கழகம், காந்தி கிராம கிராமிய பல்கலைக்கழகம். இந்த பல்கலைக்கழகம் சுற்றியுள்ள கிராமப்புற மாணவர்களின் நலன் கருதி கிராமிய பல்கலைக்கழகமாக 1956ம் ஆண்டு துவங்கப்பட்டது. இந்த பல்கலைக்கழகம் தொடர்பாக பிரதான கோரிக்கையை ஒரு






முன்மொழிவை ஒன்றிய அரசுக்கு முன் வைத்துள்ளேன். இந்தியாவில் துவங்கப்பட்ட 14 கிராமப்புற பல்கலைக்கழகங்களில் செயல்படக்கூடிய பல்கலைக்கழகமாக இன்றுவரை உள்ளது. இப்போது நாக் கமிட்டியின் ஏ.பிளஸ் பிளஸ் போன்ற தரச்சான்றுகளையும் பெற்றிருக்கிறது. சுமார் 197 ஏக்கர் நிலப்பரப்பளவுள்ள இந்த பல்கலைக்கழகத்தில் எல்லா வசதிகளும் உள்ளன. கென்யா, ருவாண்டா, கானா, மற்றும் நேபாளம், தென் ஆப்பிரிக்கா, போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து பல வெளிநாட்டு மாணவர்கள் இங்குவந்து ஆராய்ச்சிப் படிப்புகளை படித்து வருகின்றனர். இதைத்தவிர திண்டுக்கல், மதுரை, தேனி, கரூர், விருதநகர் ஆகிய பகுதிகளிலிருந்து வரும் கிராமப்புற மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் பல்வேறு பாடத்திட்டங்கள் உள்ளன. இந்த பல்கலைக்கழகத்தில் 55 துறைகள் செயல்படுகின்றன. ஏற்கனவே முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டும் கூட காந்திகிராம் பல்கலைகழயத்தை மத்திய பல்கலைக்கழகமாக மத்திய அரசு அங்கீகரிப்பதில் என்ன பிரச்சனை இருக்கிறது என்று தெரியவில்லை. கிராமப்புற வளர்ச்சிக்கு பயன்படுகிற இந்த பல்கலைக்கழகத்தை மத்திய பல்கலைக்கழகமாக அறிவிக்க மத்திய அரசு முன்வரவேண்டும். இது ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தில் சேருகின்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்வாதாரமாக உள்ளது. மாணவர்கள் நலன் கருதி மத்திய அரசு காந்திகிராம பல்கலைக்கழகத்தை மத்திய பல்கலைக்கழகமாக தரம் உயர்த்த வேண்டும் என்றார். திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் அவர்களின் கோரிக்கைக்கு பல்கலையில் பணிபுரியும் பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

# திருப்பதி லட்டு கலப்பட நெய் விவகாரம்: லஞ்சம் வாங்கிய அதிகாரியின் ஜாமீன் மனு நிராகரிப்பு

நெல்லூர், ஜன.19-

ஆந்திராவில் ஜெகன் மோகன் ரெட்டி ஆட்சியின்போது திருப்பதி ஏழுமலையான் கோயிலின் லட்டு பிரசாதம் தயாரிக்க கலப்பட நெய் பயன்படுத்தப்பட்டதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து வருகிறது. அக்குழு இது வரை 14 பேரை கைது செய்துள்ளது.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டவரும் ஏ34 குற்றவாளியுமான திருப்பதி தேவஸ்தான அதி



காரி விஜயபாஸ்கர் ரெட்டி அளித்த வாக்குமூலத்தில், "நான் நெய்யை பரிசோதனை செய்த போது அதில் கலப்படம் இருப்பதை அறிந்தேன். இதுகுறித்து விநியோகம் செய்த நிறுவனங்களுக்கு எடுத்துக் கூறினேன். ஆனால், அவர்கள், எனக்கு தொடர்ந்து லஞ்சம் கொடுத்து நெய்யை தொடர்ச்சியாக விநியோகம் செய்து வந்தனர்.

இதன் மூலம் திருமலை திருப்பதி தேவஸ்தானத்துக்கு ரூ.118 கோடி நஷ்டம் ஏற்பட்டது. 2023ல் போலே பாபா நெய் நிறுவனத்தில் இருந்து ரூ.75 லட்சம், பிரிமியர் நிறுவனத்தில் இருந்து ரூ.8 லட்சம் லஞ்சம் பெற்றேன்" என தெரிவித்துள்ளார்.

மேலும் இவர் ஜாமீன் கோரி மனு தாக்கல் செய்திருந்தார். ஆனால், லஞ்சம் வாங்கியதை ஒப்புக் கொண்டதால், இவரது ஜாமீன் மனுவை நெல்லூர் லஞ்ச ஒழிப்பு நீதிமன்றம் நிராகரித்தது.

# "சாதி, இனப் பாகுபாட்டுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்" ராகுல் காந்தி வலியுறுத்தல்

புதுடெல்லி, ஜன.19-

சாதி, இனப் பாகுபாட்டுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தினார்.

சாதிப் பாகுபாடு காரணமாக ஹைதராபாத் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தலித் மாணவர் ரோஹித் வேமுலா கடந்த 2016ம் ஆண்டு ஜனவரி 17ல் தற்கொலை செய்து கொண்டார். அவருடைய 10வது நினைவு தினத்தையொட்டி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி நேற்று தனது எக்ஸ் தளத்தில் கூறியுள்ளதாவது:

ரோஹித் இறந்து 10 ஆண்டுகளான பின்னரும் நிலைமை மாறவில்லை. ஹைதராபாத் பல்கலைக்கழக வளாகத்தில் அதே



நிலைமைதான் நீடிக்கிறது. அதே வன்முறை, அதே பாகுபாடு நீடிக்கிறது. கல்வி நிறுவனங்களில் சாதி அடிப்படையிலான பாகுபாடு ஒரு குற்றமாக மாற வேண்டும். குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், சாதி, இனப் பாகுபாட்டுக்கு எதிரான சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

கர்நாடகா, தெலங்கானா மாநிலங்களை ஆளும் காங்கிரஸ் அரசுகள், சாதிப் பாகுபாட்டுக்கு எதிரான சட்டங்களை விரைவில் கொண்டு வரவுள்ளன. அதைப் போல நாடு முழுவதும் சட்டம் வரவேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ம.பி.யில் ஆறுதல்: மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில், மாசடைந்த குடிநீரைக் குடித்த பலர் உயிரிழந்தனர். மேலும் பலர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோரை, ராகுல் நேற்று நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் ராகுல் கூறும்போது, ''மக்களுக்கு சுத்தமான தண்ணீரை வழங்குவதும் மாசுபாட்டைக் குறைப்பதும் மாநில அரசாங்கத்தின் பொறுப்பு. ஆனால் மாநில அரசோ இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றவில்லை. இந்தூரில் ஏற்பட்ட குடிநீர் பேரழிவுக்கு மாநில அரசே பொறுப்பேற்க வேண்டும்'' என்றார்.




# எம்ஜிஆர் பிறந்த நாளில் பிரதமர் மோடி மரியாதை

புதுடெல்லி, ஜன.19-

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ராமச்சந்திரன் பிறந்தநாளை முன்னிட்டு, பிரதமர் நரேந்திர மோடி எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:மாபெரும் தலைவர் எம்.ஜி.ஆர். பிறந்தநாளில் அவருக்கு எனது மரியாதையை செலுத்துகிறேன். தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு மிகச் சிறப்பானது. அதேபோல் தமிழ் கலாச்சாரத்தைப் பிரபலப்படுத்துவதில் அவரது பங்கு குறிப்பிடத்தக்கது.

நமது சமூகத்துக்கான அவரது தொலைநோக்குப் பார்வையை நனவாக்க நாங்கள் எப்போதும் தொடர்ந்து பணியாற்றுவோம். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

# சிவலிங்கம் நிறுவும் பணி: முதல்வர் நிதிஷ் குமார் ஆய்வு

பாட்னா, ஜன.19-

பிஹாரின் கிழக்கு சம்பாரண் மாவட்டம் கல்யாண்பூர் அருகில் புதிதாக விராட் ராமாயணக் கோயில் கட்டப்படுகிறது. இங்கு 33 அடி உயர பிரம்மாண்ட சிவலிங்கம் நிறுவும் பணி நேற்று நடைபெற்றது. இப்பணியை பிஹார் முதல்வர் நிதிஷ் குமார்



பார்வையிட்டார்.பிறகு கோயில் வளாகத்தை பார்வையிட்ட நிதிஷ் குமார் அங்கு நடைபெறும் கட்டுமானப் பணிகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது, துணை முதல்வர்கள் சாம்ராட் சவுத்ரி, விஜய் குமார் சின்ஹா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.தமிழ்நாட்டின் மாமல்லபுரத்தில் ஒரே பாறையில் செதுக்கப்பட்ட இந்த சிவலிங்கம் 210 மெட்ரிக் டன் எடை கொண்டது. இது பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட 96 சக்கரங்கள் கொண்ட டிரெய்லர் மூலம் கல்யாண்பூருக்கு கொண்டுவரப்பட்டது. பிஹார் மாநில மத அறக்கட்டளை குழுவின் (பிஎஸ்ஆர்டிசி) உறுப்பினர் சயன் குனால் மற்றும் பக்தர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

# சோலைமலை அழகர்பெருமாள் கோவிலில் 2 லட்சம் வாழைப் பழங்களை சூறை விட்டு நேர்த்திக்கடன்

சின்னாளபட்டி, ஜன.19-

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு அருகே உள்ள சேவுகம்பட்டி கிராமத்தில் சுமார் 800 ஆண்டுகள் பழமைவாய்ந்த சோலைமலை அழகர் பெருமாள் கோவில உள்ளது. இந்துசமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான சோலைமலை அழகர் பெருமாள் கோவிலில் பொங்கல் பண்டிகை முடிந்தவுடன் மறுநாள் அப்பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் தவறாமல் மழை பெய்து விவசாயம் செழிக்கவும், வேண்டுதல்கள் நிறைவேறவும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் சோலைமலை அழகர்பெருமாளை



வேண்டிக் கொள்கின்றனர். இவ்வாறு வேண்டிக்கொண்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் சுவாமிக்கு வாழைப்பழம் சூறைவிடும் திருவிழாவினை ஆண்டுதோறும் தை 3ம் தேதி நடத்தி வருகிறார்கள். இத்திருவிழாவினை முன்னிட்டு ஊரின் எல்லையில் உள்ள காவல் தெய்வமான ரெங்கம்மாள் கோவில் முன்பாக பெரிய பாத்திரங்களில் வாழைப்பழங்கள் நிரப்பப்பட்டு, அதற்கு மாலை அணிவித்து பூஜை நடைபெற்றது. அதன்பின்பு முக்கிய வீதிகளின் வழியாக மேளதாளம் மற்றும் வான வேடிக்கைகள் முழங்க ஆண்கள் மட்டுமே தலையில் வைத்து வாழைப்பழங்கள் நிரப்பப்பட்ட பாத்திரங்களைச் சுமந்து வந்தனர். பின்பு பெருமாள்கோவில் முன்பாக உள்ள மண்டு கோவிலில் சிறப்பு பூஜை செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வாழைபழங்கள் நிரப்பப்பட்ட பாத்திரங்கள் சோலை மலை அழகர்பெருமாள் கோவிலுக்குள் ஆண்பக்தர்கள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்ற முடிந்தவுடன், கோவிலுக்கு வெளியே காத்திருந்த பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு வாழைப்பழங்களை பாத்திரங்களில் கொண்டு வந்து சூறைவிட்டனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000